குழந்தைத் தொழிலாளர் இல்லாத

# குவலயம் போற்றும் ஒளிமிகு தமிழ்நாடு நோக்கி ஒன்றாகப் பயணிப்போம்!

## குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி விடுத்த செய்தியில் - முதல்வர் வேண்டுகோள்!

**சேலம், ஜூன் 12-**

**இன்று, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், "அரசு நிறுவனங்களும், உள்ளாட்சி அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களும் ஒரே குரல் ஓங்கி ஒலித்து குழந்தைத் தொழிலளார் இல்லாத குவலயம் போற்றும் ஒளிமிகு தமிழ்நாடு நோக்கி நாம் அனைவரும் ஒன்றாகப் பயணிப்போம்!" என்று குறிப்பிட்டார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புத் தினச் செய்தி வருமாறு:-**

குழந்தைப் பருவம், ஒவ்வொருவருக்கும்ஏற்படும்மகத்தானவாழ்க்கை நிலை. துள்ளிக் குதிக்கவும், உலகைப் பார்த்து வியக்கவும், ஒவ்வொன்றையும் துருவித் துருவி ஆராயவும், அனைவரும்முயலும்அரிய பருவமே குழந்தைப் பருவம்.

குழந்தைகளை மிகப் பெரிய பேறு என்று கருதியதால்தான் வள்ளுவர் மழலைகளுக்காக ஓர் அதிகாரத்தையே ஒதுக்கினார். மழலைகளின் குரல்கள் யாழையும், குழலையும் மிஞ்சுவன என்று பாராட்டினார்.

**கற்றுக்கொள்ள மட்டுமல்ல; பள்ளிகளே நாற்றங்கால்கள்!**

குழந்தைகள் விளையாடியும், கலந்துரையாடியும், கதை பேசியும் களிக்கவேண்டிய பருவத்தில், அவர்களைப் பள்ளிகளிலிருந்துப் பிரித்தெடுத்து, பட்டறைகளுக்கு அனுப்புவது மாபெரும் குற்றம்; அவர்களின் குழந்தைத் தனத்தைத் திருடும் பாதகம். குழந்தைகள் பள்ளிகளுக்குப் படிப்பதற்கு மட்டும் செல்வதில்லை. சக குழந்தைகளோடு பூக்களை ரசிப்பதற்கும், புன்னகை களைப் படரவிடுவதற்கும், பூமியின் உயிர்த் துடிப்பை உணர்வதற்கும் தான். கற்றுக்கொள்ள மட்டுமல்ல; உற்றுநோக்கவும் பள்ளிகளே அவர்களுக்கு நாற்றங்கால்களாக இருக்கின்றன.

**பணியிடம் எனும் சிறையில் அடைக்கும் கொடுமை!**

குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளின் குழந்தைத்தனத்தைத் திருடி, துடிப்பு மிக்க அவர்கள் பார்வையை மங்கியதாக மாற்றி, துள்ளு கின்ற அவர்களைத்து வள்கிறவர்களாக்கி, பாடத்தை ஏந்த வேண்டிய அவர்கள் கைகளில், பணிக் கருவிகளைத் தாங்கும் சூழ்நிலையை உருவாக்கி, அவர்கள் சிறகுகளைக் கத்தரித்து, பணியிடம் என்கின்ற சிறையில் அடைப்பது மிகப் பெரிய கொடுமை.

குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றுவது அவர்களுக்கு அளிக்கப்படுகிற மிகப் பெரிய விடுதலை, வாழ்நாள் பரிசு. தமிழ்நாடு அரசு அதனைத் தன் தலையாய கடமையாகக் கருதி, விழிப்புணர்வை விதைத்துக் கொண்டு வருகிறது. மாபெரும் இயக்கமாக இது ஓங்கி வளர்ந்திருப்பதால், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னோடி மாநிலமாக முன்னேறியிருக்கிறது. 2025 ஆம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்பதே அரசின் இலக்கு.

**இருகைகளால் உதவிகளை வாரி வழங்குகிறது அரசு!**

குழந்தைகள் செம்மையாகப் படிக்க, கட்டணமில்லாக் கல்வி; கைகளில் தவழும் பாடப் புத்தகங்கள்; எழுதிப் பழக நோட்டுப் புத்தகங்கள்; அவையனைத்தையும் வைக்க புத்தகப் பை; அணிந்து மகிழ சீருடை; பசியின்றிப் படிக்க காலைச் சிற்றுண்டி யும்; மதிய உணவும்; வசதியாய் நடக்கக் காலணி; அசதியின்றி பயணிக்கப் பேருந்து அட்டை; ஓட்டிப் பழக மிதிவண்டி என்று உதவிகளை இரண்டு கைகளாலும் அள்ளி அள்ளி வழங்குகிறது தமிழ்நாடு அரசு. படிப்பு சுமையாக இல்லாமல், சுகமாக மாறவே இத்தனை நலத் திட்டங்கள்.

தமிழ்நாடு அரசு வகுக்கும் திட்டங்களை, அரசுத் துறைகள் செயல்படுத்துவதோடு, குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட நிறுவனங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று விரும்புகிறோம். அரசு சாரா நிறுவனங்களும், உள்ளாட்சி அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களும் ஒரே குரலில் ஓங்கி ஒலித்தால், குழந்தைத் தொழிலாளர் இல்லாத குவலயம் போற்றும் ஒளிமிகு தமிழ்நாடு உருவாகும்.

அதை நோக்கி நாம் அனைவரும் ஒன்றாகப் பயணிப்போம்!!!

இவ்வாறு முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

முதுபெரும் அரசியல் தலைவர் லாலு பிரசாத் பிறந்தநாள்!

# ' உறுதியான நிலைப்பாடுகளால் சமரசமற்ற சமூக நீதிப் போராளியாகத் திகழ்கிறார்! '

## வலைதளப் பதிவு வாழ்த்துச் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, ஜூன் 12-**

**பீகார் மாநில முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தியில் "மாறுபாடற்ற உறுதியான நிலைப்பாடுகளில், லாலு பிரசாத் அவர்கள், ஒரு சமரசமற்ற சமூக நீதிப் போராளியாகத் திகழ்கிறார்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதுபெரும் அரசியல் தலைவரும், ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தேசியத் தலைவருமான லாலு பிரசாத் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி வருமாறு:

முதுபெரும் அரசியல் தலைவரும், ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தேசியத் தலைவருமான லாலு பிரசாத் அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்.

மனிதர்களின் மரியாதைக்கு (இஜ்ஜத்) அவர் அளித்த முக்கியத்துவமானது, அவரது அரசியலை தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்துக்கு மிக நெருக்கமான தாக்குகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடானாலும், சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்காகக் குரல் கொடுப்பதானாலும், மதச்சார்பின்மையை நிலை நிறுத்துவதானாலும் தாம் எடுத்த மாறுபாடற்ற உறுதியான நிலைப்பாடுகளால் லாலு பிரசாத் அவர்கள் ஒரு சமரசமற்ற சமூகநீதிப் போராளியாகத் திகழ்கிறார்.

அவரது 76ஆவது பிறந்தநாளில், மேலும் பல்லாண்டுகள் அவர் மக்கள் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வட இந்தியாவில் மண்டல் அரசியலை வலுப்படுத்த வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

விவசாயிகளிடம் கனிவோடு உறவாடி பாசனத்தைப் பாதுகாக்கும்

# 'டெல்டாவின் காவலர்' நம் முதல்வர்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு

*சென்னை, ஜூன் 12-*

விவசாயிகளிடம் கனிவோடு உறவாடி, பாசனத்தை பாதுகாக்கும் டெல்டாவின் காவலர் நம் முதல்வர் என்று வேளாண் குடி முன்னோடிகள் மகிழ்கின்றனர் என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இது குறித்து 11.6.2023 தேதிய 'தினகரன்' தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

நஞ்சையும், புஞ்சையும் செழித்துக் கிடக்கும் தஞ்சை சீமையின் சுற்றுப்புற மாவட்டங்களே! தமிழ்நிலத்தின் பெருமை மிகு உணவுக்களஞ்சியம். இந்த வகையில் 13 மாவட்டங்களில் 17 லட்சம் ஏக்கர் பரப்பளவானது டெல்டா பாசனப்பகுதியாகிறது. குடகுமலையில் உற்பத்தியாகும் காவிரி ஒகேனக்கல்லில் தாய் மண்ணை தழுவுகிறது. அங்கிருந்து சிறிப்பாய்ந்து மேட்டூர் அணையில் சங்கமிக்கிறது. இப்படி சங்கமிக்கும் நீரே அணையில் இருந்து திறந்து விடப்பட்டு டெல்டாவின் பசுமைக்கு உயிரூட்டுகிறது.

ஆண்டுதோறும் டெல்டா பாசனத்திற்காக ஜூன் 12ம்தேதி அணையில் இருந்து நீர் திறப்பது வழக்கமாக இருந்தது. இப்படி உரிய தேதியில் தண்ணீர் திறப்பதால் நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் 4லட்சத்து 91 ஆயிரத்து 200 ஏக்கர் நிலமும், கடலூர் மாவட்டத்தில் 30 ஆயிரத்து 800 ஏக்கர் நிலமும் குறுவை பாசன வசதி பெறும். ஆனால் கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் குறிப்பிட்ட நாளில் மேட்டூர் அணை திறப்பது என்பது குதிரைக் கொம்பாகவே இருந்தது. இனிவரும் காலங்களில் குறித்த தேதியில் டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணை திறக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு ஒட்டு மொத்த விவசாயிகளிடமும் எழுந்தது.

இந்தநிலையில் கடந்த 2021ம் ஆண்டில் மக்கள் தந்த மாபெரும் வெற்றியால், தனது தலைமையிலான அரசை அமைத்து முதல்வராக, பொறுப்பேற்றார் மு.க.ஸ்டாலின். அந்தாண்டு வழக்கமான தேதியிலேயே தனது கரங்களால் மேட்டூர் அணையை திறந்து வைத்து வறண்ட நிலங்களெல்லாம் வளம்பெற வழி வகுத்தார். இதற்கடுத்த ஆண்டு (2022) யாரும் எதிர்பார்க்காத வகையில் ஜூன் 12ம் தேதிக்கு முன்பாகவே (மே24ம் தேதி) அணையில் இருந்து நீர்திறக்க உத்தரவிட்டு. விவசாயிகளை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தினார். மேட்டூர் அணை வரலாற்றில் இதுபோன்ற



தினகரன்

ஜூன் 11, 2023 ஞாயிற்றுக்கிழமை

டெல்டாவின் காவலர்

நஞ்சையும், புஞ்சையும் செழித்துக்கிடக்கும் தஞ்சை சீமையின் சுற்றுப்புற மாவட்டங்களே தமிழ்நிலத்தின் பெருமை மிகு உணவுக்களஞ்சியங்கள். இந்த வகையில் 13 மாவட்டங்களின் 17 லட்சம் ஏக்கர் பரப்பளவானது டெல்டா பாசனப்பகுதியாகிறது. குடகுமலையில் உற்பத்தியாகும் காவிரி, ஒகேனக்கல்லில் தாய்மண்ணை தழுவுகிறது. அங்கிருந்து சீறிப்பாய்ந்து மேட்டூர் அணையில் சங்கமிக்கிறது. இப்படி சங்கமிக்கும் நீரே அணையில் இருந்து திறந்து விடப்பட்டு டெல்டாவின் பசுமைக்கு உயிரூட்டுகிறது.

ஆண்டுதோறும் டெல்டா பாசனத்திற்காக ஜூன் 12ம்தேதி அணையில் இருந்து நீர்திறப்பது வழக்கமாக இருந்தது. இப்படி உரிய தேதியில் தண்ணீர் திறப்பதால் நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் 4லட்சத்து 91 ஆயிரத்து 200 ...

நிகழ்வு எப்போதும் நடந்ததில்லை என்று வியந்து நின்றனர் வேளாண் மேம்பாட்டு வல்லுநர்கள். இந்தவகையில் நடப்பாண்டும் 12ம் தேதி அன்று தனது கரங்களால் காவிரி நீரை மேட்டூர் அணையில் இருந்து திறந்துவிடுகிறார் முதல்வர். இப்படி உரிய நேரத்தில் நீரை திறந்துவிடும் முதல்வர், டெல்டா பாசனத்தின் மேம்பாட்டுக்கான திட்டங்களிலும் முத்திரை பதித்து வருவது மனமார்ந்த பாராட்டுக்குரியது. அணையில் இருந்து திறக்கப்படும் நீரானது கடைமடை வரை பாய்ந்து சென்று பயன்பெறுவதற்கான அனைத்து பணிகளும் முன்கூட்டியே செய்யப்பட்டுள்ளது. மேலும், டெல்டாவின் மேம்பாட்டுக்காக ரூ. 21,000 கோடியில் அவர் அறிவித்து செயல்படுத்தி வரும் வேளாண் தொழில் பெருந்தடம் திட்டமும் பசுமை ஆர்வலர்களின் பாராட்டுகளை குவித்து வருகிறது.

இது ஒருபுறமிருக்க டெல்டாவை பாழாக்க நினைக்கும் திட்டங்களையும் தூளாக்கி வருகிறார் முதல்வர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு பாசனப்பகுதிகளில் நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசு மேற்கொண்டது. உடனடியாக இதற்கு எதிர்ப்பு தெரிவித்த முதல்வர், இந்தத் திட்டத்தை எந்தநிலையிலும் ஏற்கமாட்டோம் என்று சட்டமன்றத்திலேயே கம்பீரமாக அறிவித்ததோடு, அதை தடுத்தும் நிறுத்தினார். இதேபோல் நீரை திறந்து விடுவதற்கு முன்பு, பாசனப் பகுதிகளை முழுமையாக ஆய்வும் செய்துள்ளார் முதல்வர். அப்போது அவர் கூறிய வார்த்தை டெல்டா உரிமைகளை எந்த நிலையிலும் இந்த அரசு விட்டுக்கொடுக்காது' என்பதே இப்படி துணிவோடு களமாடி, கனிவோடு விவசாயிகளிடம் உறவாடி பாசனத்தை பாதுகாப்பவர் நமது முதல்வர். அவரை 'டெல்டாவின் காவலர்' என்பதில் என்றென்றும் பெருமையே என்று அகம் மகிழ்ந்து, மனம் நெகிழ்ந்து நிற்கின்றனர் நமது வேளாண் குடி முன்னோடிகள்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர்களாக நியமிக்கப்பட்ட

# சுப்ரியா சுலே, பிரபுல் படேலுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!





**சென்னை, ஜூன் 12-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வலைதளம் வாயிலாக விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சுப்ரியா சுலே அவர்களுக்கும் பிரபுல் படேல் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

தங்கள் கட்சியின் வளர்ச்சிக்காகத் தாங்கள் இருவரும் மேற்கொண்ட கடின உழைப்பும், தங்களது நாடாளுமன்றச் செயல்பாடுகளும் தங்களை இப்பதவி உயர்வுக்கு மிகவும் தகுதியுடையவராக்குகின்றன.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

# சென்னை - சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை!

*சென்னை, ஜூன்.12-*

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது கனமழை பெய்து வருகிறது.

மேற்கு திசை காற்று மற்றும் வெப்ப சலனம் காரணமாக இன்று (12.06.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. வாசுதேவன்

**ஜூன் 12 (2020)**



தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

லால்குடியில் இருந்து ஆலங்குடி

# மகாஜனம் கிராமத்திற்கு கூடுதல் பேருந்து இயக்கம்!

## முதல்வரிடம் கோரிக்கை வைத்த மறுநாளே நடவடிக்கை! பொதுமக்கள் மகிழ்ச்சி!





திருச்சி, ஜூன் 12-

முதல்அமைச்சரிடம் கோரிக்கை வைத்த மறுநாளே லால்குடியில் இருந்து ஆலங்குடி மகாஜனம் கிராமத்திற்கு கூடுதல் பஸ் இயக்கப்பட்டதால் கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர் என 'தினத்தந்தி' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருச்சி மற்றும் தஞ்சை மாவட்ட காவிரி டெல்டா பகுதிகளில் நடந்து வரும் தூர்வாரும் பணிகளை நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிலையில் அவர் திருச்சி மாவட்டம் லால்குடி அருகே உள்ள ஆலங்குடி மகாஜனம் செங்கரையூர் கூழையாற்றில் நடைபெறும் தூர்வாரும் பணியை ஆய்வு செய்ய செல்லும் வழியில் ஆலங்குடி மகாஜனம் கிராமத்தில் காரை நிறுத்தி அங்கிருந்த மக்களிடம் கலந்துரையாடினார்.

அப்போது, கிராம மக்கள் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்தனர். லால்குடியில் இருந்து ஆலங்குடி மகாஜனம் கிராமத்திற்கு போக்குவரத்து வசதி மிகவும் குறைவாக உள்ளது. இதனால் பள்ளி மாணவிகள் குறிப்பிட்ட நேரத்திற்குள் பள்ளிக்கு செல்ல முடியாமல் மாணவ-மாணவிகள் அவதி அடைந்து வருகின்றனர். எனவே கூடுதல் பஸ் வசதி வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்த பஸ் லால்குடியில் இருந்து தினமும் காலை 6 மணி, 8 மணி, 11.35 மணி, மதியம் 1.50 மணி, மாலை 4.20 மணி, 5. 30 மணி, இரவு 7.50 ஆகிய நேரங்களில் மகாஜனம் கிராமத்திற்கு இயக்கப்படுகிறது. முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்த மறுநாளே பஸ் இயக்கப்பட்டதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து ஆலங்குடி மகாஜனம் கிராமத்தை சேர்ந்த பிரேமா கூறும்போது, பல ஆண்டுகளாக எங்கள் கிராமத்திற்கு பஸ் வசதி இல்லை. எங்கள் கிராமம் வழியாக வருகை தந்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் கோரிக்கை வைத்தோம். கோரிக்கை வைத்த மறுநாளே பஸ் இயக்கப்பட்டது. இதற்கு முதல்அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம், என்றார். மகாராணி என்ற பெண் கூறும்போது, முதல் அமைச்சரிடம் கோரிக்கை வைத்த உடன் பஸ்கள் இயக்கப்பட்டதால் மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் மூலம் பள்ளி குழந்தைகள், வேலைக்கு செல்லும் தொழிலாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கோரிக்கைவைத்த உடனே பஸ் இயக்கிய முதல்அமைச்சருக்கு கிராம மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம், என்றார்.